
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1056**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

**குமரன்தாஸ்**

**42**

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

## ‘பிள்ளையோ பிள்ளை’ கடமை தவறாத கொள்கைச் சிங்கங்கள்!

படங்கள் உதவி : ஞானம்



ஆணாதிக்கவாதியாகவும், சமூக விரோதியாகவும், பக்திமானாகவும் நடித்துக்கொண்டே வில்லனாக வாழ்ந்துவரும் தந்தைக்கு, சட்டத்தின் முன் தண்டனை பெற்றுக் கொடுக்கும் மகன்களின் கதைதான் ‘பிள்ளையோ பிள்ளை’. தனது தனிச்சிறப்பான திரைக்கதை முத்திரையை, இந்தத் திரைப்படத்திலும் பதித்திருப்பார் கலைஞர்.

படத்தின் தொடக்கக் காட்சியில், ஒரு காரில் கங்காதரனும் (ஆர்.எஸ்.மனோகர்) அவன் மனைவி காஞ்சனாவும் (ஆர்.விஜய குமாரி) வந்து இறங்கி, மாளிகைக்குள் நுழைகின்றனர். வீட்டினுள் பிள்ளையார் படம் மாட்டப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்தவுடன் கங்காதரன் பக்தியில் உருகிப்போய் வணங்குகிறான்.

அப்போது அங்கு வரும், முன்னாள் வேலையாள் முருகன் (எம்.ஆர்.ஆர்.வாசு) கங்காதரனைத் தாக்கிவிட்டு காஞ்சனாவைக் கடத்திச்சென்று, ரகசிய இடத்திற்கு வந்து சேர்க்கிறான். அப்போது காஞ்சனா முருகனைப் பார்த்து, “ஏன் என்னைக் கடத்திவந்தாய்?” எனக் கோபமாகக் கேட்க, “பயப்படாதே! உன் கணவனைப் பழிவாங்க” என்கிறான் முருகன்.

**காஞ்சனா:** “அவரை எதுக்காக நீ பழி வாங்கணும்? அவர் ஒரு பாவமும் அறியாதவர். பக்திமான், பண்பாளர்!”

**முருகன்:** “ஆகா, உன் கணவன் சிறந்த பக்திமான். அதுவும் கோயிலிலே இருக்கும் விக்கிரகங்களைக் கண்டால் அவனுக்கு அதிக பக்தியுண்டு.”

**காஞ்சனா :** “என்ன சொல்றே?”

**முருகன்:** “ஆமாம், ஆலயங்களில் இருக்கும் அழகான விக்கிரகங்களைத் திருடி அயல் நாட்டிலே விற்பதிலே அசகாய சூரன் உன் கணவன்.”

**காஞ்சனா :** “என்ன! விக்கிரகங்களைத் திருடினாரா? அவர் மேலே வீண்பழி சுமத்தாதே. நீ சொல்றதை எல்லாம் நான் நம்ப மாட்டேன். பொய் ... பொய்!” என காஞ்சனா கணவருக்காக வாதாடுவாள். ஆனால், அதன் பின்புலக்காட்சியில், கோயில் சிலையை அடியாள்கள் துணையுடன் கங்காதரன் திருடுவான்.

### பக்திமான்களின் முகத்திரை

கங்காதரன் சிலையைத் திருடிக் கொடுத்துவிட்டு, முருகனை வீட்டுக்குப் போ என்று அனுப்புவான். கங்காதரனின் மாளிகையில் கைக்குழந்தையுடன் கங்காதரனின் (முதல்) மனைவி பார்வதி (ஜி.சகுந்தலா) காத்திருக்கிறாள். முருகனைப் பார்த்தவுடன், தனது கணவன் எங்கே என்று கேட்க, ‘பெருமாள் கோயிலில் சொர்க்கவாசல் திறப்பதைப் பார்க்கச் சென்றிருக்கிறார்’ என்கிறான்.

**பார்வதி :** “அப்படியா? முருகா, உங்க அய்யாவுக்கு எவ்வளவு தெய்வ பக்தி பார்த்தியா?”

**முருகன்:** “ம்... நல்ல பக்திங்க, அதிலேயும் இந்தப் பொம்பள சாமிங்கன்னா? அப்பப்பா... மீனாட்சி, காமாட்சி, சரஸ்வதி, பார்வதி, பராசக்தி... இந்த மாதிரி பொம்பள சாமின்னா அய்யா விடிய விடிய விழுந்து கும்பிடுவார்!” என்று இரட்டை அர்த்தத்தில் முருகன் சொல்கிறான். ஆனால், இதைப் புரிந்து கொள்ளாதவளாகப் பார்வதி இருக்கிறாள். இக்காட்சியில் கலைஞரின் வசனங்கள் போலிப் பக்திமான்களின் முகத்திரையைக் கிழித்துத் தொங்கவிடக்கூடியவையாக உள்ளன.

### அனல் தெறிக்கும் நீதிமன்றம்

காலம் உருண்டோடுகிறது. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி, உண்மைகளைத் தெரிந்துகொள்கின்றனர்.

கங்காதரனுக்கும் முதல் மனைவி பார்வதிக்கும் பிறந்த முருகனால் கடத்திவந்து வளர்க்கப்படும் குமாரும் (மு.க.முத்து) கங்காதரனுக்கும் காஞ்சனாவுக்கும் பிறந்த மகன் கண்ணனும் (மு.க.முத்து) ஒன்றுசேர்ந்து கங்காதரனுக்கு எதிராகப் போராடுகின்றனர். ஆனால் கங்காதரன், குமார் மீது திருட்டுப் பட்டம் சுமத்தி சிறையில் அடைப்பதுடன், கண்ணன் மீதும் கொலைப்பழி சுமத்தி சிறையில் தள்ளுகிறான்.

நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. கங்காதரனுக்கு ஆதரவாக அரசு வழக்கறிஞர் நிர்மலா (எஸ்.வரலெட்சுமி) வாதாடுகிறார். அவர் மகள் ராதா (லெட்சுமி) கண்ணனுக்கு ஆதரவாக வாதாடுகிறார்.

அந்த வாதங்களில், கிடைக்கும் இடங்களில் நறுக்குத் தெறிக்கும் கலைஞரின் வசனங்கள் பளிச்சிடும்.



> “உமது பாவங்களை மூடிமறைக்க ஊரில் உள்ள நல்லவர்கள் மீது குற்றச்சாட்டு. உள்ளுக்குள் பழிகள் ஆயிரம்.”

நீதிமன்ற வாதங்களில் கண்ணன் எதிர்க்கேள்வி கேட்பான்.

**கண்ணன்:** “களத்தூர் மிட்டாதார் கங்காதரன் அவர்களே, தங்களுக்கு ஆண்டவன்மீது அபார பக்தி உண்டல்லவா?”

**கங்காதரன்:** “ஆமாம். ஆலயம் தொழுவது சாலவும் நன்று.”

**கண்ணன்:** “ஹ...ஹா... ஆலயத்தில் திருடுவது அதைவிட நன்று. மிட்டாதார் அவர்களே, பக்திச்சுவை சொட்டச் சொட்ட தாங்கள் பல ஆலயங்களில் உள்ள சிலைகளைத் திருடி, அவற்றை அயல் நாடுகளுக்கு அனுப்பி, அந்த நாடுகளிலும் நமது சைவமும் வைணவமும் தழைத்தோங்கப் பாடுபடுகிறீர்கள் அல்லவா?”

**அரசு வழக்கறிஞர்:** “யுவர் ஆனர், இதை அனுமதிக்கக் கூடாது!”

**கண்ணன்:** “எதை அனுமதிக்கக் கூடாது? கேள்வியையா? சிலை திருடுவதையா?”

**கங்காதரன்:** “இது பயங்கரமான குற்றச்சாட்டு. நான் பழுத்த ஆஸ்திகன்.”

**கண்ணன்:** “ம்... பழுத்த ஆஸ்திகர் கொழுத்த பணக்காரர். இப்படித்தான் உலகத்திற்கு அறிமுகமாகிறீர். ஆனால், உனது மாளிகையிலே நிலைக்கண்ணாடிக்கு எதிரே நீர் ஒரு பஞ்சமா பாதகர்.

அக்கிரமங்களை மூடிமறைக்க ஆஸ்திகர் வேசம். தீமைகளுக்குப் போடும் திரையாக நெற்றியிலே திருநீறு. உமது பாவங்களை மூடிமறைக்க ஊரில் உள்ள நல்லவர்கள் மீது குற்றச்சாட்டு. உள்ளுக்குள் பழிகள் ஆயிரம், உதட்டிலே பக்திப் பாயிரம். நாளெல்லாம் ஊரை ஏய்க்கும் தந்திரம், நாவிலோ நமச்சிவாய மந்திரம். தேவாலயங்களிலோ கொள்ளை, முன்போ கொஞ்சி மகிழ ஒரு கிள்ளை.”

**கங்காதரன்:** “போதும் போதும், கோர்ட்டார் அவர்களே! இவனைத் தடுத்து நிறுத்துங்கள்.”

அப்போது நீதிமன்றத்திற்குள் மற்றொரு கதாநாயகனான குமார் வந்து, நீதிபதியிடம் சில ஆதாரங்களை அளிப்பான். அதனடிப்படையில், அடுத்த நாள் விசாரணை நடக்கும்போது, கங்காதரனின் மனைவியான காஞ்சனா பொய்சாட்சி சொல்வாள். அப்போது, தன் தாயைப் பார்த்து கண்ணன் கேட்கும் வசனங்களும் கூர்மையாக இருக்கும்.

“அம்மா, மகனின் பாசமா? மணாளனின் பக்தியா? எது சிறந்தது என்ற கேள்விக்கு ஒரு தமிழ்நாட்டுத் தாய் அளிக்கும் பதிலைத்தான் தாங்கள் அளித்திருக்கிறீர்கள்.

“ஒருநாள் காலை, தகத்தாய சூரியன் உதயமாவதற்கு முன்பு, உங்கள் அன்பு மகன் தூக்குக் கயிற்றிலே தொங்கிவிடுவான். தொட்டில் கயிறு பிடித்து தமிழே! அமுதே! என்று தாலாட்டுப் பாடி தூங்க வைத்தாயே அம்மா, இப்போது நீ ஆட்டிடும் தூக்குக்கயிற்றிலே மீளாத் துயில் கொள்ளப் போகிறேன் அம்மா. அந்த ஆழ்ந்த நித்திரையின்போது ஒரேயொரு அன்பு முத்தம் எனக்கு, ‘என் கண்ணே கடமையும் கண்ணியமும் தானடா உன் உயிர். என் கணவருக்காக இல்லையில்லை அவர் கட்டிய மாங்கல்யத்திற்காக, நெற்றிப் பொட்டு அழியாதிருப்பதற்காக உன்மீது குற்றம்சாட்டி குழியிலே படுக்க வைத்து விட்டேனடா. என் செல்வமே!’ என ஒரேயொரு ஆறுதல் வார்த்தை கூறிடுங்கள் அம்மா, அதுபோதும் எனக்கு’, எனப் பேசும் நீண்ட வசனம் உணர்ச்சிகரமாக இருக்கும்.

**...காட்சி விரியும்**

## பொறுப்பை மறந்த நிதீஷ்குமார்!

பீகாரில் பா.ஜ.க.விடம் சரணாகதி அடைந்த நிதீஷ்குமார், சமீபத்தில் பாட்னாவில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், ஹிஜாப் அணிந்த ஒரு பெண்ணிடம், அவரது ஹிஜாபை கழற்றுவதற்காக மேடை நாகரிகமற்று நடந்துகொண்டது, கடும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

‘பா.ஜ.க.வும் ஐக்கிய ஜனதா தளம் கட்சியும் என்ன வகையான அரசியலைச் செய்கின்றனர் என்பதை, அந்த நிகழ்வு வெளிக்காட்டி விட்டது’ என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இந்த நிலையில், தனது பொறுப்பை மறந்து, முதலமைச்சர் நிதீஷ்குமார் செய்த செயலை, இப்போது பா.ஜ.க. தொண்டர்கள் செய்யத் தொடங்கி விட்டனர்.

நிதீஷ்குமாரின் செயலைக் கண்டிக்கும் விதமாக, முஸ்லிம் பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்துவரும் நிலையில், பீகாரின் சில இடங்களில் ‘ஹிஜாப் அகற்றுவோம்’ எனச் சில அத்துமீறும் நிகழ்வுகள் தொடங்கியுள்ளன.

கர்நாடகாவில் கடந்த ஆட்சிக் காலத்தில், ‘முஸ்லிம் பெண்களின் ஹிஜாபை அகற்றுவோம்’ என இந்து மதவாத அமைப்பினர் அத்துமீறல்களைத் தொடங்கியதும், அதற்கு அப்போதைய பா.ஜ.க. அரசு ஆதரவாக நின்றதும், பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது. மக்களின் உடைகள், சமய நம்பிக்கைகளில் அரசியல் ஆதாயம் தேட முயன்ற மதவாத அரசியல்வாதிகளை மக்கள் ஜனநாயக முறையில் முறியடித்தனர். இப்போது, பீகாரில் ஹிஜாப் சர்ச்சையைக் கையில் எடுத்து, மாநிலத்தைப் பதற்றமாக்கியுள்ளனர். அதைத் தொடங்கி வைத்துள்ளார், அம்மாநில முதலமைச்சர் நிதீஷ்குமார்.

மதவாதம் வெல்லாது! மக்களின் குரல் ஜனநாயகத்தில் வெல்லும்!

## ஃப்ளாஷ்பேக்



ச.அக்பர் பாஷா



### பிறந்தநாளில் தலைவரிடம் வாழ்த்து!

2010-ஆம் ஆண்டு டிசம்பர் 5-ஆம் தேதி, எனது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில், அன்றைய கழகப் பொருளாளரும் துணை முதலமைச்சருமான, இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றேன். அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. அதற்குப் பிறகு, தலைவர் அவர்களைப் பார்க்கும் வாய்ப்புகள் அமைந்தாலும், முதன்முதலில் பார்த்து மகிழ்ந்த நினைவாக, இப்படத்தை எனது வாழ்நாள் பொக்கிஷமாகப் பாதுகாப்பேன்.

**– ச.அக்பர் பாஷா, அண்ணா நகர், முன்னாள் 105 – (அ) வட்ட ஒருங்கிணைப்பாளர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### நிலக்கரி, இரும்பு, மின்சாரத் தொழில்கள் வேண்டும்!

1955-ஆம் ஆண்டு, பிப்ரவரி 20-ஆம் தேதி, கோவை–பேரூரில் நடைபெற்ற கழகத்தின் பொதுக்குழுவில், ஐந்து ஆண்டுத் திட்டத்தின் பேரில், தமிழ்நாடு வஞ்சிக்கப்படுவதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. நிலக்கரி, இரும்பு, மின்சாரம் ஆகிய தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த ஆண்டு மார்ச் 20-ஆம் தேதி ‘ஐந்து ஆண்டுத் திட்ட கண்டன நாள்’ நடத்துமாறு கிளைக் கழகத்தினரை அந்தப் பொதுக்குழு கேட்டுக்கொண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131